மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : அரசின் நிதி நிலைமைக்கு ஏற்ப பின்னால் பரிசீலிக்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சத்துணவுத் திட்டத்தில் தவறிழைத்து பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள்.

62—(*வினா எண். 5097) டாக்டர் கே. குமாரதாஸ் : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் சத்துணவுத் திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டவர்களில் தவறிழைத்த தன்காரணமாக தற்காலிகமாகவும், நிரந்தரமாகவும் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் இதுவரை எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சத்துணவுத் திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டவர்களில் தவறிழைத்ததின் காரணமாக இதுவரை நிரந்தரமாக 8 நபர்களும், தற்காலிகமாக 11 நபர்களும் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், ஃபேமிலி பிளானிங் ஸ்கீமிற்கு பெண்களை ஏற்பாடு செய்து கொடுக்கவில்லை என்ற காரணத்தால், பல சத்துணவு ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்திருப்பதாக புகார்கள் பெறப்பட்டிருக்கின்றன. டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்திலே கூட இது எழுப்பப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட புகார்கள் ஏதேனும் அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானால் அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் ஏதும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. ஏற்கெனவே சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றுகிறவர்களை, குடும்ப நலத் திட்டத்திற்கு ஆள் பிடிப்பதற்கு பயன்படுத் தக்கூடாது என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே அவர்களை குடும்ப நலத்திட்டத்திற்கு பயன்படுத்துவதில்லை. அங்கே வருகிற தாய்மார்களிடத்தில் பிரச்சாரம் செய்யத்தான் பயன்படுத்துகிறோமே தவிர, ஆள் பிடித்து வர பயன்படுத்துதில்லை.

1986 நவம்பர் 18]

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் என்பது இந்த அரசினுடைய உயிர்நாடித் திட்டமாக இருந்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில் தமிழகத்தில் பல இடங்களில் குறிப்பாக என் தொகுதியில் கூட காலியாக உள்ள சத்துணவு ஆசிரியர்கள் அல்லது அமைப்பாளர்கள் பதவிகள், ஒரு காலகட்டத்திற்குள் நிரப்பப்பட வேண்டும் என்ற ஒரு திட்டவட்டமான முடிவை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களுக்குத் தேவையான பணியாளர்களை பத்திரிகையில் விளம்பரம் செய்து, அவர்களிடத்திலிருந்து உரிய விண்ணப்பங்கள் வரப் பெற்றவுடன், நேர்முகத்தேர்வின் மூலமாகத்தேர்ந்து எடுக்கப்படுகின்றனர். ஆகவே, கணிசமான அளவுக்குத் தேவை என்ற நிலையில், முறையாக எடுக்கப்படுகிறது. உடனடியாக தேவைப்படுகிற சத்துணவுக் கூடங்களில், பக்கத்திலே இருக்கின்ற சத்துணவுக் கூடத்தில் வேலை புரிபவர்கள் கூடுதல் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். தேவைப்படுகிற காலங்களில், சில இடங்களில் சில பேர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

திரு. பரப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டு கேள்வி நேரத்தில் கூடாது. அது நீக்கப்படுகிறது.

தென்னாற்காடு மாவட்டத்தில் கதர்வாரிய கைத்தொழில்கள்

63—(*வினா எண்.9077)—திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கதர் வாரியத்தால் மேற்கொண்டுள்ள கைத்தொழில் பணிகள் யாவை?

(ஆ) அதன் மூலம் பயனடைவோர் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக 56 அலகுகளும், சங்கங்களின் மூலமாக 59 அலகுகளும், தனி நபர் மூலமாக 3255 அலகுகளும் செயல்பட்டு வருகின்றன. அதன் மூலமாக 16,859 நபர்கள் வாய்ப்பும், பயனும் அடைந்து வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.